
மார்க்கெட்

பிஎஸ்இ	என்எஸ்இ
↓ -353 பாயிண்ட்	↓ -51 பாயிண்ட்
73,246	22,699



தங்கம் ↑ +480
1 சவரன் ₹1,05,560
1 கிராம் ₹13,195



வெள்ளி
விலையில் மாற்றம் இல்லை
1 கிலோ ₹2,20,000
1 கிராம் ₹220

$ டாலர் ₹95.22

விலை நிலவரம்
பெட்ரோல் ₹107.77
டீசல் ₹99.55



ரஞ்சி கோப்பை லீக் ஆட்டம்
5 விக்கெட் வித்தியாசத்தில் ரயில்வேஸை வீழ்த்தியது தமிழ்நாடு

சென்னை, அக். 29: ரயில்வேஸ் அணியுடனான ரஞ்சி கோப்பை எலைட் டி பிரிவு லீக் ஆட்டத்தில், தமிழ்நாடு அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்று 6 புள்ளிகள் பெற்றது.

சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் அரங்கில் நடந்த இப்போட்டியின் முதல் இன்னிங்சில் ரயில்வேஸ் 184 ரன், தமிழ்நாடு 165 ரன் எடுத்து ஆல் அவுட் டாகின. 19 ரன் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை விளையாடிய ரயில்வேஸ் 108 ரன்னில் சுருண்டது (52.3 ஓவர்).

தமிழ்நாடு பந்துவீச்சில் கேப்டன் சாய் கிஷோர் 4, ஹேம்சுதேஷன் 3, அஜித் ராம் 2, குர்ஜப்னீத் 1 விக்கெட் வீழ்த்தினர். அடுத்து 128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தமிழ்நாடு 59.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்து வென்றது.

அதிஷ் 21, ஜெகதீசன் 12, சோனு யாதவ் 2, பாபா இந்திரஜித் 23, பிரதோஷ் ரஞ்சன் பால் 1 ரன்னில் அவுட்டாகினர். ஆந்த்ரே சித்தார்த் 56 ரன், விமல் குமார் 10 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 2 இன்னிங்சிலும் சேர்த்து 7 விக்கெட் வீழ்த்திய சாய் கிஷோர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். தமிழ்நாடு அணி 6 புள்ளிகளை தட்டிச் சென்றது.

ஐசிசி டி20 பேட்டிங் தரவரிசை
அபிஷேக் மீண்டும் நம்பர் 1

டி20 டாப் 10 பேட்ஸ்மேன்

ரேங்க்	வீரர்	புள்ளி
1	அபிஷேக் ஷர்மா (இந்தியா)	897
2	ஷாகிப்ஸதா பர்ஹான் (பாக்.)	883
3	இஷான் கிஷன் (இந்தியா)	866
4	ஹாரி புரூக் (இங்கிலாந்து)	793
5	ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து)	789
5	டிவால்ட் பிரெவிஸ் (தெ.ஆப்.)	789
7	ஃபில் சால்ட் (இங்கிலாந்து)	775
8	ஷாய் ஹோப் (வெ.இண்டீஸ்)	759
9	ஷ்ரேயாஸ் அய்யர் (இந்தியா)	758
10	திலக் வர்மா (இந்தியா)	724

துபாய், அக். 29: சர்வதேச டி20 போட்டிகளுக்கான ஐசிசி பேட்டிங் தரவரிசை பட்டியலில் இந்திய அணி தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார்.

நியூசிலாந்து அணிக்கு எதிராக வெலிங்டனில் நடந்த 3வது டி20ல் அதிரடியாக 38 பந்தில் 113 ரன் விளாசிய அபிஷேக், டி20 பேட்டிங் தரவரிசையில் 897 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறினார்.



பாகிஸ்தானின் சாஹிப்ஸதா பர்ஹான் (883) 2வது இடத்தை பிடித்த நிலையில், காயம் காரணமாக ஓய்வெடுத்து வரும் இஷான் கிஷன் (866) 2 இடங்கள் பின்தங்கி 3வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

டி20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. அதே சமயம் டெஸ்ட் பவுலிங் தரவரிசையில் தென் ஆப்ரிக்க வேகம் மார்கோ யான்சென் 5 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஜிம்பாப்வேயுடன் ஒருநாள் தொடர்
ஹாட்ரிக் வெற்றியுடன் ஒயிட்வாஷ் செய்தது இந்தியா

வதோதரா, அக். 29: ஜிம்பாப்வே மகளிர் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரின் 3வது போட்டியில் 8 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்ற இந்தியா, 3-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றி அசத்தியது.

வதோதராவில் நேற்று நடந்த இப்போட்டியில், டாஸ் வென்று பேட் செய்த ஜிம்பாப்வே அணி 39.5 ஓவரில் 131 ரன்னுக்கு ஆல் அவுட்டானது (மாடெஸ்டர் 37, கேப்டன் ஜோசபின் 35, சியட்ஸா துருரு 20). இந்திய பந்துவீச்சில் வைஷ்ணவி 5 விக்கெட் வீழ்த்தினார். கிராந்தி, சாயாலி தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

அடுத்து களமிறங்கிய இந்தியா பிரதிகா ராவல் - ஷபாலி வர்மா ஜோடி 3வது விக்கெட்டுக்கு அதிரடியாக விளையாட... 17 ஓவரிலேயே 133 ரன் எடுத்து ஹாட்ரிக் வெற்றியை வசப்படுத்தியது. பிரதிகா 59 ரன் (56 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்), ஷபாலி 51 ரன்னுடன் (26 பந்து, 6 பவுண்டரி, 3 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா 3-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப்பற்றி ஒயிட்வாஷ் செய்தது. வைஷ்ணவி ஆட்டநாயகி விருதும், பிரதிகா ராவல் (220 ரன்) தொடர்நாயகி விருதும் பெற்றனர்.

நவ 1ல் அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்


சென்னை, அக்.29: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில், நவம்பர் 1ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட செயலாளர் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில், இடைத்தேர்தலில் அதிமுக தோல்வி மற்றும் உட்கட்சி பிரச்னை குறித்து முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டு, முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

பொதுக்கூட்டம்: அதிமுகவின் 55வது ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு மறைமலைநகரில் வரும் 31ம் தேதி, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. எடப்பாடி பழனிசாமி சிறப்புரை ஆற்றுகிறார் என அதிமுக தலைமை தெரிவித்துள்ளது.

போத்தீஸ் ஸ்வர்ண மஹாலில் ஸ்வர்ண தீபாவளி சிறப்புச்சலுகைகள்

நெல்லை, அக்.29: போத்தீஸ் ஸ்வர்ண மஹால், இந்தத் தீபாவளிப்பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், தங்கம், வைரம், பிளாட்டினம் மற்றும் வெள்ளி நகைகளுக்குச் சிறப்புச்சலுகைகளை அறிவித்துள்ளது. பிராண்டட் டிவி, ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின், ஓவன் உள்ளிட்ட பல்வேறு இலவச உறுதிப் பரிசுகளையும் வாடிக்கையாளர்கள் பெற்றிடலாம்.



இந்தத் தீபாவளிச் சிறப்புச்சலுகையாக, தங்க நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சவரனுக்கு ₹2,000 தள்ளுபடி வழங்கப்படுகிறது.

வைர நகைகளுக்கு ஒரு காரட்டுக்கு ₹12,000 தள்ளுபடி, பிளாட்டினம் நகைகளின் வேஸ்டேஜில் பிளாட் 15% தள்ளுபடி, பழங்கால வடிவமைப்பிலான வெள்ளிப்பொருட்களின் செய்கூலியில் பிளாட் 25% தள்ளுபடி மற்றும் எம்ஆர்பி விலையில் விற்பனை செய்யப்படும் வெள்ளிப் பொருட்களுக்கு பிளாட் 10% தள்ளுபடி வழங்கப்படுகிறது. மேலும், அனைத்து சாதாரண வெள்ளி நகைகள் மற்றும் கொலுசுகளுக்கும் 0% செய்கூலி, 0% வேஸ்டேஜ் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

இந்தச் சிறப்புச் சலுகைகள் குறித்து போத்தீஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் சடையாண்டி ரமேஷ் கூறுகையில், "தங்கத்தின் விலை குறைந்துள்ள இந்தச் சூழல், தங்கம் வாங்குவதற்கும், சேமிப்பில் மதிப்புமிக்க சொத்தாகச் சேர்ப்பதற்கும் ஏற்ற தருணமாகும். இந்தத் தீபாவளிக்காக, கண்கவர் புதிய நகை வடிவமைப்புகளின் தனித்துவமான தொகுப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கவர்ச்சிகரமான பண்டிகைச் சலுகைகளுடன், இலவசப் பரிசுகளும் ஒவ்வொரு பர்ச்சேஸையும் மேலும் மகிழ்ச்சிகரமானதாகவும் மதிப்புமிக்கதாகவும் மாற்றுகின்றன. நம்பிக்கை, தரம் மற்றும் சிறந்த மதிப்புடன் ஒவ்வொரு கொண்டாட்டத்தையும் சிறப்பானதாக மாற்றுவதே போத்தீஸ் ஸ்வர்ண மஹாலின் நோக்கம்" என்றார்.

வாடிக்கையாளர்கள் தங்களது பழைய தங்கம் மற்றும் வைர நகைகளைப் பரிமாற்றம் செய்து, BIS HUID ஹால்மார்க் கொண்ட நகைகளையும் 100% இயற்கையான வைரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். இந்த ஸ்வர்ண தீபாவளிச் சிறப்புச் சலுகைகள் 2026 நவம்பர் 9 வரை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போத்தீஸ் ஸ்வர்ண மஹால் ஷோரூம்களிலும் வழங்கப்படும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.

பிரபல ரவுடி சிடி மணி துப்பாக்கி முனையில் கைது
தொழிலதிபர்களை மிரட்டி மாமூல் வசூலிக்க சென்னை புறநகரில் முகாமிட்டது அம்பலம்

சொகுசு காரில் இருந்து ரூ.20 லட்சம் பறிமுதல்

சென்னை, அக்.29: தீபாவளியை முன்னிட்டு புறநகர் பகுதியில் உள்ள வியாபாரிகளிடம் மாமூல் வசூலில் ஈடுபட்ட பிரபல ரவுடி சிடி மணியை, துப்பாக்கி முனையில் போலீசார் கைது செய்தனர். அவரது சொகுசு காரில் இருந்து கட்டுக்கட்டாக ரூ.20 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை தேனாம்பேட்டை சத்தியமூர்த்தி நகரை சேர்ந்தவர் மணிகண்டன் (52). தேனாம்பேட்டை நடைபாதையில் சிடி விற்பனை செய்து வந்த அவர், சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்டு ரவுடி திண்டுக்கல் பாண்டியின் மறைவுக்கு பிறகு ரவுடியாக உருவெடுத்தார். சிடி விற்பனை செய்து வந்ததால் இவரை சிடி மணி என்று ரவுடிகள் செல்லமாக அழைத்தனர். இதனால் பிற்காலத்தில் தனது பெயரை சிடி மணி என்று வைத்துகொண்டர்.

தென் சென்னை பகுதியில் முக்கிய ரவுடியாக உருவான இவர், பிரபல தாதா சம்பவம் செந்தில், என்கவுன்டர் செய்யப்பட்ட ரவுடி ராதா, காக்கா தோப்பு பாலாஜி ஆகியோரின் நெருங்கிய கூட்டாளியாவர். இவர் மீது 2007ம் ஆண்டு தேனாம்பேட்டையில் நடந்த வெங்கட் கொலை, 2009ம் ஆண்டு கோயம்பேட்டில் நடந்த வாழைத்தோப்பு சதீஷ் கொலை, 2012ம் ஆண்டு நடந்த கோட்டூர்புரம் ஆவி சுரேஷ் கொலை, 2013 ஆண்டு வேலூர் சிலோன் மோகன் கொலை, கே.கே. நகரில் இரட்டை கொலை வழக்கு என 10 கொலை, கொலை முயற்சி உட்பட 30க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

திருச்சி ராமஜெயம் கொலை வழக்கிலும் இவர் பின்னணியில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. 5 முறை குண்டர் தடுப்புசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர். தமிழகத்தில் உள்ள ரவுகள் பட்டியலில் சிடி மணி 'ஏ பிளஸ்' கேட்டகிரி ரவுடி பட்டியலில் முதல் 3வது இடத்தில் உள்ளார்.



மேலும், ஐடெக் ரவுடியான இவர், 10 ஆண்டுகளுக்கு முன், டெல்லியில் விற்பனைக்கு வந்த குண்டு துளைக்காத சொகுசு கார் வாங்கிய முதல் ரவுடியும் இவர் தான். தென் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில், தொழிற்சாலைகளில் ஸ்கிராப் மொத்தமாக வாங்கும் தொழில் செய்து வருகிறார்.

இது தவிர புறநகர் பகுதிகளில் தொழிலதிபர்களை கடத்தி பணம் கேட்டு மிரட்டுதல், கட்டப்பஞ்சாயத்து, ரியல் எஸ்டேட் அதிபர்களை மிரட்டி நிலத்தை எழுதி வாங்குவது உள்ளிட்டவை இவர் மீது தற்போதும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்நிலையில் சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பிறகு போலீசாரின் என்கவுன்டருக்கு பயந்து ரவுடி சிடி மணி தமிழகத்தை விட்டு வெளி மாநிலங்களுக்கு தப்பி ஓடிவிட்டார். பிறகு தவெக அரசு தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு ரவுடி சிடி மணி வெளிமாநிலத்தில் இருந்து மீண்டும் தமிழகத்திற்கு திரும்பி, சேலத்தில் பதுங்கி தனது ரவுடி தொழிலை செய்து வந்தார். இதற்கிடையே தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ளி தொழிலதிபர்கள், வியாபாரிகள், ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் மாமூல் வசூலிக்கும் வகையில் கடந்த ஒரு வாரமாக புறநகர் பகுதிகளில் முகாமிட்டிருந்தார்.

இதுகுறித்து சென்னை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி தனிப்படை ஒன்று செங்கல்பட்டு மாவட்டம் சிங்கபெருமாள் கோயில் அருகே ரகசியமாக கண்காணித்து வந்தனர். அப்போது, ரவுடி சிடி மணி, வியாபாரிகளிடம் தீபாவளி மாமூல் வசூலித்து வந்தது உறுதியானது. நேற்று முன்தினம் இரவு சிங்கப்பெருமாள் கோயிலில் இருந்து தீபாவளி பண்டிகைக்கு வசூலித்த மாமூல் பணத்துடன் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள வீட்டிற்கு தனது சொகுசு காரில் சென்றபோது, தனிப்படை உதவி ஆய்வாளர் ஜெய்கணேஷ் தலைமையிலான குழுவினர் துப்பாக்கி முனையில் அவரை கைது செய்தனர்.

போலீசார் தன்னை சுற்றி வளைத்துவிட்டதை உணர்ந்த ரவுடி சிடி மணி, கைதுக்கு முன்பு தனது செல்போனில் நேரலையில் 'தன் மீது உதவி ஆய்வாளர் ஜெய்கணேஷ் என்பவர் பொய் வழக்கு பதிந்து கைது செய்து விட்டதாக' வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதைதொடர்ந்து சிடி மணியின் சொகுசு காரை போலீசார் சோதனை செய்தபோது, அதில் கட்டுக்கட்டாக ரூ.20 லட்சம் இருந்தது. இதையடுத்து அந்த பணம் மற்றும் சொகுசு காரை பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட ரவுடி சிடி மணியை தனிப்படை போலீசார் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

TMB தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்
Tamilnad Mercantile Bank Ltd — Be a step ahead in life
திருநெல்வேலி மண்டலம்
எண்'.3A/16, முதல் மாடி, தெற்கு பைபாஸ் ரோடு, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி - 627 003.
CIN NO. L65110TN1921PLC001908

வாகன ஏல விற்பனை அறிவிப்பு

எங்கள் வங்கியில் நல்ல இயங்கும் நிலையில் உள்ள கீழ்கண்ட விபரங்கள் அடங்கிய வாகனம் எந் த நிலையில் உள்ளதோ (As is Where is Condition) அதே நிலையில் **10.11.2026** அன்று மதியம் 3.00 மணி அளவில், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி லிட், திருநெல்வேலி மண்டல அலுவலகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. விண் ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன.

Make	பதிவு எண்.	மாதம் & வருடம்	ஏல நிர்ணயத் தொகை
Force Tempo Traveller (9 + D)	TN 72 CA 7665	09/2022	₹7,00,000/- (Including GST)

விருப்பமுள்ள நபர்கள் "வாகனத்திற்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்பட்ட சீல் செய்யப்பட்ட கடித உறையில் "Tamilnad Mercantile Bank Ltd" என்ற பெயரில் முன் வைப்புத் தொகையான ரூ.70,000/- மதிப்புள்ள வங்கி வரைவோலையை (Demand Draft) கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு **10.11.2026** ம் தேதி மாலை 2.30 மணிக்குள் பெறும்படி அனுப்ப வேண்டும்.

மண்டல மேலாளர், திருநெல்வேலி மண்டலம், எண்'.3A/16, முதல் மாடி, தெற்கு பைபாஸ் ரோடு, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி - 627 003.

1. வெற்றிப்பெறாத ஏலதாரருக்கு முன் வைப்புத்தொகைக்கான வரைவோலை திரும்பத் தரப்படும்.
2. ஏலத்தில் பங்கு பெற விரும்புவர்கள், மேற்படி வாகனத்தை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையிலும், அனைத்து வேலை நாட்களிலும், முதன்மை மேலாளர், தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்க் லிமிடெட், திருநெல்வேலி மண்டலம் (போன் நம்பர் 98421 32134 மற்றும் 98421 61110) அவா்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து நேரம் ஒதுக்கி பார்வையிட்டு கொள்ளலாம்.
3. ஏலகத்தில் எடுக்கும் நபர் வட்டார போக்குவரத்து துறையின் Name Transfer மற்றும் Registration சார்ந்த இதர செலவுகளையும் அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. மண்டல மேலாளருக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்றுக்கொள்ளவோ, மாற்றி வைக்கவோ, ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு.
5. வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு குறைவாக வாகனம் விற்கப்படமாட்டாது.
6. முன்வைப்புதொகை செலுத்தியவர்கள் மட்டுமே ஏல விற்பனையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
7. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் புகைப்பட அடையாள அட்டையான பாஸ்போர்ட், ஓட்டுனர் உரிமம், ஆதார் அட்டை, PAN அட்டை etc ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கொண்டுவர வேண்டும்.
8. பொருந்தக்கூடிய ஜிஎஸ்டியை ஏலத் தொகைக்கு ஏலதாரர் தனியாக செலுத்த வேண்டும்.
9. எந்தக் காரணத்தையும் குறிப்பிடாமல், எந்தவொரு / அனைத்து ஏல விண்ணப்பங்களை ஏற்க அல்லது நிராகரிக்க வங்கிக் கு உரிமை உள்ளது.

இடம்: திருநெல்வேலி
தேதி : 28.10.2026

மண்டல மேலாளர்
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.,
திருநெல்வேலி மண்டலம்

KALAKSHETRA FOUNDATION
(An Autonomous Body under Ministry of Culture, Government of India)
Thiruvanmiyur, Chennai - 600 041.

Applications are invited from candidates for filling various posts under Kalakshetra Foundation **on Deputation/Short term contract and Direct recruitment.**
The Recruitment Notice has been published in the Employment News dated 24-30 October 2026. Further information are available on **www.kalakshetra.in.**
Closing date for receipt of applications in KF by post is 23-11-2026.

DIRECTOR

ஜெம் வீரமணி வழக்கு
ஜான் பாண்டியனிடம் எஸ்ஐடி குழுவினர் தீவிர விசாரணை

சென்னை, அக்.29: ஜெம் வீரமணி வழக்கில், டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் உத்தரவுப்படி ஐஜி தேன்மொழி தலைமையில் 4 பெண் அதிகாரிகள் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. இந்த குழு ஜெம் வீரமணியால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் குறித்து புகார் அளிக்கலாம் என்று சிறப்பு வாட்ஸ்அப் எண் ஒன்றை வெளியிட்டது.

அதன்படி இதுவரை ஜெம் வீரமணி மீது 12க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளது. ஜெம் வீரமணி மீது இதுவரை 8 போக்சோ வழக்குகள் மற்றும் சிறுமி ஒருவரை தற்கொலைக்கு தூண்டியது என மொத்தம் 9 வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெம் வீரமணியின் பாலியல் சீண்டலுக்கு உதவியதாக அவரிடம் கார் டிரைவராக பணியாற்றிய பாபு, பார்த்திபன், லாசர் ஆகியோரை கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் எஸ்ஐடி குழுவினர் கைது செய்தனர்.

பின்னர் அவர்களின் வீடுகளில் நடத்திய சோதனையில், வழக்கு தொடர்பாக 8 செல்போன்கள், 55 ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சோதனையில் கிடைத்த ஆவணங்கள் மற்றும் டிரைவர்கள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் கடந்த அக்டோபர் காங்கிரஸ் காங்கிரஸ் கட்சியின் மாநில எஸ்சி, எஸ்டி பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமாரிடம் 2 முறை விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில் ஜெம் வீரமணி வழக்கில் எம்.பி.ரஞ்சன் குமார் அளித்த வாக்குமூலத்தில், தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியனை சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் சாந்தியை சந்திக்க ஏற்பாடு செய்ததாகவும், அப்போது ஜெம் வீரமணிக்கு ஆதரவாக ஜான் பாண்டியன் பேசியதாக தெரிவித்திருந்தார்.

இதனால் எஸ்ஐடி குழு காங்கிரஸ் நிர்வாகி எம்.பி.ரஞ்சன் குமார் அளித்த தகவலின் அடிப்படையில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியனுக்கு நேற்று நேரில் ஆஜராக சம்மன் அனுப்பட்டது. அதன்படி ஜான் பாண்டியன் நேற்று எஸ்ஐ குழு தலைவர் ஐஜி தேன்மொழி முன்பு ஆஜராகி விளக்கம் அளித்தார்.

அப்போது, ஜெம் வீரமணிக்கும் உங்களுக்கு என்ன தொடர்பு?, யார் உதவியுடன் சாந்தியை நட்சத்திர ஓட்டலில் சந்தித்தீர்கள், ஜெம் வீரமணியிடம் ரூ.20 கோடி பெற்று தருமாறு சாந்தி கூறியதாக சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளீர்கள் அது உண்மையா?, ஒரு அரசியல் கட்சி தலைவர் கூறியதால் தான் ரஞ்சன்குமார் தன்னை சந்தித்ததாக செய்தி ஊடகங்களில் கூறியுள்ளீர்கள், அந்த கட்சி தலைவர் யார்?, இந்த வழக்கில் நீங்கள் ஜெம் வீரமணிக்கும், சாந்திக்கும் இடையே பிரச்னையை தீர்க்க கட்டப்பஞ்சாயத்து செய்தது உண்மையா?, காங்கிரஸ் நிர்வாகி எம்.பி.ரஞ்சன் குமார் உங்களை சந்தித்து பேசியது என்ன என்பது உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கேள்விகள் கேட்டதாகவும், அதற்கு சில கேள்விகளுக்கு மட்டும் ஜான் பாண்டியன் பதில் அளித்ததாகவும், மற்ற கேள்விகளுக்கு அவர் மவுனம் காத்ததாகவும் கூறப்படுகிறது. இருந்தாலும் ஜான் பாண்டியனிடம் நடத்திய விசாரணையின் போது அவர் அளித்த பதிலை எஸ்ஐடி குழுவினர் வாக்குமூலமாக வீடியோ பதிவுகள் செய்து கொண்டனர்.

ஜெம் வீரமணி வழக்கில் அரசியல் கட்சி தலைவர் ஒருவரிடம் எஸ்ஐடி குழுவினர் விசாரணை நடத்திய சம்பவம் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில்
அதிமுகவினர் தீவிரமாக ஈடுபட வேண்டும்

எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்தல்

சென்னை,அக்.29: அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:


2027 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தப் பணிகள் நடைபெற உள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல் நவம்பர் 12ம் தேதி வெளியிடப்படுகிறது.


வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்களை நவம்பர் 12ம் தேதி முதல் டிசம்பர் 11ம் தேதி வரை அளிக்கலாம். இதற்காக நவம்பர் 21, 22, 28 மற்றும் 29ம் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன. இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஜனவரி 4ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

இந்தப் பணியில் அதிமுக தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் பல்வேறு நிலை நிர்வாகிகள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், கட்சித் தொண்டர்கள், குறிப்பாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

18 வயது நிறைவடைந்தவர்கள் மற்றும் 17 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள், இளம்பெண்கள், இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள், புதிதாக குடியேறியவர்கள் ஆகியோரின் பெயர்களைச் சேர்க்க நடவடிக்கைஎடுக்கவேண்டும். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் முறைகேடுகள் ஏதேனும் கண்டறியப் பட்டால், உடனடியாக சம்பந்தப் பட்ட தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்து உரிய தீர்வு காண வேண்டும்.

காணவில்லை





ரெஜி P.V.	சூசன் ரெஜி	ஜோமெட் ரெஜி
வயது: 62	வயது: 58	வயது: 35
உயரம்: சுமார் 5' 5"	உயரம்: சுமார் 5 அடி	உயரம்: சுமார் 5'5"
உடலைப்பு: நடுத்தர உடலமைப்பு	உடலமைப்பு: நடுத்தர உடலமைப்பு	உடலைப்பு: நடுத்தர உடலமைப்பு
சிறப்பம்சங்கள்: தாடி இல்லை, மீசை உண்டு, நரைத்த முடி, வழுக்கை, எப்போதும் கண்ணாடி அணிந்திருப்பார் மற்றவை: நடப்பதில் சிரமம்	சிறப்பம்சங்கள்: போதுமான அளவு முடி உடை: வழக்கமாக புடவைகள் மற்றும் சுடிதார்கள் அணிவார்.	சிறப்பம்சங்கள்: தாடி உண்டு, நீண்ட முடி வைத்திருப்பார். உடை: பொதுவாக பேண்ட்கள் மற்றும் சட்டைகள் அணிவார்.

மேலே உள்ள புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபர்களான (1) ரெஜி P.V (வயது 62), (2) சூசன் ரெஜி (வயது 58), (3) ஜோமெட் ரெஜி (வயது 35) ஆகியோர், கோட்டயம் மாவட்டம், பனச்சிக்காடு கிராமம், பூவந்தூருத் அஞ்சல் நிலையம், கிழக்கேமூலா, பாலமட்டத்தில் இல்லத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், கோட்டயம், கேரளா, இந்தியா, கோட்டயம் கிழக்கு காவல் நிலையத்தில் கே.பி. சட்டத்தின் பிரிவு 57–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண். 1352/2026–இன் படி, 26/09/2026 அன்று காணாமல் போயுள்ளனர். அவர்கள் இருக்கும் இடம் குறித்து யாருக்கேனும் தகவல் தெரிந்தால், தயவுசெய்து பின்வரும் தொடர்பு எண்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கவும்.

கோட்டயம் கிழக்கு காவல் நிலையம் (கேரளம்) - 0481 256 0333
SHO, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497987071
SI, கோட்டயம் கிழக்கு P.S (கேரளம்) - 9497980326

RO.NO:389/F2/2026/I&PRD

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-Aஅசையாச்சொத்து(கள்)மின்-ஏலம்பொது விற்பனைஅறிவிப்பு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: எண். 10A, முதல் தளம், மதுரை சாலை, முருகன் திரையரங்கம் அருகில், திருநெல்வேலி 627001, தமிழ்நாடு.,

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது.
கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன்எண்/கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ஜாமீன்தாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்(A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP)(E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் (10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/RTIR/0224/1214632, ஆண்டனி ஆரோக்கிய பிரபாகர் A /பாத்திமா ஜெயராணி, கிளை அலுவலகம்:– திருநெல்வேலி	Rs. 3065204.09 & 13.06.25	நேரடி	சர்வே எண். 120/9, புதிய, துணைப் பிரிவு சர்வே எண். 120/9B, வார்டு எண். 11, நசரேத், நசரேத் கிராமம் சார் பதிவு அலுவலகம், நாசரேத் நகர பஞ்சாயத்து, பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், தூத்துக்குடி, தூத்துக்குடி, தமிழ்நாடு–628653	Rs. 2447000	Rs. 244700	12.11.26	Rs. 10000	05.11.26 11:00AM -5:00PM	13.11.26 2:00PM -3:00PM	எதுவுமில்லை/ அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை.
2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும்.
3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும்.
4. M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண் 68, 3ஆவது தளம், செக்டார் 44, குர்கான், ஹரியானா 122003, இணையதளம்–www.bankeauctions.com, மின்–ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை ஸ்ரீசரண்/ஏங்கெல்ஸ்/ அருண்குமார் சண்முகசுந்தரம், செல்பேசி: 9738931789/ 934400787/ 9025468525, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com – ஐ காணவும்.

இடம்:-திருநெல்வேலி, நாள்: 28.10.2026

ஒ/ம்- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்